**செய்தி வெளியீடு எண்: 19/2024** **நாள்: 27.01.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சிங்கார சென்னை அட்டையை பயன்படுத்தி அதிக முறை பயணம் செய்த மெட்ரோ இரயில் பயணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன**

மெட்ரோ இரயில் பயணிகளின் அனுபவங்களை மேம்படுத்துவதற்கும், பல்வேறு முறைகளில் தடையற்ற பயணத்தை எளிதாக்குவதற்கும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கியின் சிங்கார சென்னை அட்டையோடு (NCMC) சராசரி நிலைக் கட்டணத்தை ஒருங்கிணைத்தது.

தேசிய பொது இயக்க அட்டை கட்டண விகிதத்தை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கவும், பயணிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கி நிதி உதவியுடன் ஒரு மெகா பரிசு திட்டத்தை அறிவித்தது.

ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2024 இல் சிங்கார சென்னை அட்டையை அதிக முறை பயன்படுத்தி பயணம் செய்த மெட்ரோ இரயில் பயணிகளில் தலா 40 பயணர்களை அடையாளம் கண்டு வெகுமதி அளிப்பதை நோக்கமாகக் கொண்டது இந்த முயற்சி.

சென்னை திரு.வி.க.பூங்கா, செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், டிசம்பர் 15 முதல் ஜனவரி 14 வரை அதிகமுறை பயணம் செய்த 40 பயணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு மு.அ. சித்திக், இ.ஆ.ப., வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), பாரத ஸ்டேட் வங்கியின் துணைப் பொது மேலாளர் (பி&ஓ), திரு. பெனுதர் பர்ஹி, மண்டல மேலாளர், திரு. D.C.அஸ்வத் துரை செல்வம், மார்க் மெட்ரோ இயக்குநர் திரு. அனந்த் கிருஷ்ணன் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக இந்த பரிசளிப்பு விழாவில் குமரனின் கலெக்டிவ் பேண்டுடன் சூப்பர் சிங்கர் பிரியங்கா ஆகியோரின் நேரடி இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**